## ஸதஃகதுல் ஃபித்ரு

இஸ்லாம் மனிதர்களுக்காக வகுத்தளித்துள்ள பொருளாதார வழிமுறையின் உயர்ந்த குறிக்கோள் ஏழ்மையை ஒழிப்பதாகும். இவ்வகையில், இதன் ஒரு முக்கிய அம்சமாக இஸ்லாத்தை ஏற்று நடப்பவர்களிடையே எதுவரை உங்கள் சகோதரர்களான மற்ற மனிதர்களோடு சந்தோஷத்தைப் பகிர்ந்துகொள்ளவில்லையோ அதுவரை உங்களுடைய சந்தோஷம் முழுமைப்பெறுவதில்லை என்ற உணர்வினை இஸ்லாம் உண்டாக்குகின்றது. ஸதஃகதுல் ஃபித்ரின் ஒரு குறிக்கோள் ஈதுல் ஃபித்ருடைய சந்தோஷங்களில் ஒவ்வொருவரும் கலந்துகொள்ளவேண்டும் மற்றும் அந்நாளில் ஒவ்வொருவரும் மகிழ்ச்சியும் சந்தோஷமும் பெறவேண்டும் என்பதாகும். ஆகவேதான், ஈதுல் ஃபித்ரு தொழுகைக்கு முன்பாகவே ஸதஃகதுல் ஃபித்ரு கொடுக்கப்படவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. சில மார்க்க அறிஞர்கள் ஸதஃகதுல் ஃபித்ரு ஷாபான் மாதத்தின் பதினைந்து நாட்களுக்குப் பிறகு கொடுக்கலாம் என்று கூறுகின்றனர். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறகிறார்கள்:

زَكَاةُ الْفِطْرِ طُهْرَةٌ لِلصَّائِمِ مِنَ اللَّغْوِ وَالرَّفَثِ، وَطُعْمَةٌ لِلْمَسَاكِينِ، مَنْ أَدَّاهَا قَبْلَ الصَّلَاةِ، فَهِيَ زَكَاةٌ مَقْبُولَةٌ، وَمَنْ أَدَّاهَا بَعْدَ الصَّلَاةِ، فَهِيَ صَدَقَةٌ مِنَ الصَّدَقَاتِ أبو داؤد،ابن ماجة، حاكم )

*பொருள்: ஸதஃகதுல் ஃபித்ரு நோன்பு நோற்பவருக்கு வீணான, முறையற்ற ஒழுக்கக்கேடான செயல்களிலிருந்து தூய்மைப்படுத்தக்கூடியதும், ஏழைகளுக்கு ஒரு வேளை உணவாகவும் இருக்கின்றது. எவர் இதனைத் தொழுகைக்கு முன்பாகச் செலுத்துவாரோ அது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜ்ஸகாத்தாகக் கருதப்படும், எவர் இதனைத் தொழுகைக்குப்பிறகு செலுத்துவாரோ அது ஸதஃகாவாகவே கருதப்படும்.* (அபூ தாவூத், இப்னு மாஜா, ஹாகிம்). இந்த ஸதஃகதுல் ஃபித்ரு வசதி படைத்த அனைத்து முஸ்லிம் ஆண் பெண் மற்றும் சிறுவர்கள்கள்மீதும் வாஜிபானதாகும். குடும்பத் தலைவர் தன் வீட்டிலுள்ள ஒவ்வொருவர் சார்பாகவும் ஸதஃகதுல் ஃபித்ரு செலுத்தவேண்டும். இந்த ஸதஃகதுல் ஃபித்ருடைய அளவு ஏறத்தாழ இரண்டேகால் கிலோ தானியமாகும், இதனை தானியமாகவும் கொடுக்கலாம் அல்லது அதற்கான விலையைக் கணக்கிட்டு ரொக்கமாகவும் கொடுக்கலாம். இது ஜ்ஸகாத் பெறுவதற்குத் தகுதியுள்ளவர்கள்மீது செலவழிக்கப்படலாம் என்றாலும், தேவையுள்ளவர்களுக்கு அளிப்பது சிறந்ததாகும், ஏனெனில், இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறகிறார்கள்: *அந்நாளில் தேவையுள்ளவர்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யுங்கள்* (பைஹஃகி)

* * *

www.uzairfalahi.com